கடவுள் துணை.

# செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.


தொகுதி-சகூ.] விக்ருதிஸ்ரீ ஆவணி—ஐப்பசிமீ [பகுதி. க௦—கஉ.

Vol. 46. August—November 1950 No. 10—12.


உள்ளுறை.


| | | |
|---|---|---|
| தக்கயாகப்பரணி:— | திரு. தி. சேஷாத்திரி அவர்கள் | ககந—உ00 |
| திருமுருகாற்றுப்படை:— | திரு. வை. சுந்தரேச வாண்டையாரவர்கள் | உ0க—உ0சு |
| தமிழ்வளர்ச்சி:— | திரு. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள் | உ0எ—உ0அ |
| நாலடியார் இருவருரைத்திருத்தம்:— | திரு. சத்தியவாகீசுவரையரவர்கள் | உ0கூ—உகசு |
| மதிப்புரை:— | | உகஎ—உஉச |
| திருச்சிறுபுலியூர் உலா முகவுரை முதலியவை:— | பத்திராசிரியர் | I—XVI |
| செந்தமிழ் 46-ஆம் தொகுதியின் உள்ளுறை முதலியன:— | | 1—4 |



வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1951.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. K. Ramanuja Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

S சிவஸ்வாமி,

மானேஜர்.

உ

## “செந்தமிழ்” நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால், சென்ற நாற்பத்தாறுவருட காலமாகத் தமிழ்மொழியின்வளர்ச்சிகருதி மாதம் ஒருமுறை வெளியிடப்பெற்றுவரும் இச்“செந்தமிழ்”ப்பத்திரிகையானது, பல பண்டிதர்களாலும் எழுதிவரப்பெறும் அரியவிஷயங்களை எளிதில் எல்லோரும் உணர வெளியிடும் பெருமைவாய்ந்ததென்பது யாவரும் அறிந்ததே. அது, செந்தமிழ்நேயர்களின் அபிமானத்தையும், பண்டிதர்களின் ஆதரவையுங்கொண்டே இப்பகுதியோடு நாற்பத்தாறுந்தொகுதி முற்றுப்பெற்றிருக்கிறது. இனி, நாற்பத்தேழாந்தொகுதி தொடங்கப்பெற்று, அதன் முதற்பகுதி நாளிது கர௵ ஆவணிமீ 10உக்குள் வெளிவரும். அப்பகுதி வழக்கப்படி அங்கத்தினர்களுக்கும், செந்தமிழ்ச் சந்தாதார்களுக்கும் அத்தொகுதியின் வருஷச்சந்தாவுக்கு வி. பி. தபாலில் அனுப்பப்பெறும். செந்தமிழபிமானிகள் வி. பி. யை அன்புடன் பெற்றுப் பத்திரிகையை ஆதரித்துவருவதோடு தங்கள் நண்பர்களையும் பத்திரிகையைத் தருவித்துப் படித்துவரும்படி தூண்டவும், பண்டிதர்கள் சிறந்த விஷயதானமளித்துச் செந்தமிழைச் சிறப்பித்துவரவும் வேண்டிக்கொள்ளப்பெறுகிறார்கள்.

குறிப்பு:— நாற்பத்தேழாந்தொகுதிச் சந்தாத்தொகையை மணியார்டர்மூலம் அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர், நாளிது கர௵ ஆவணிமீ 5உக்குள் இச்சங்கமாபீசிற்குக் கிடைக்கும்படி மணியார்டரை அனுப்பிவைத்தல் வேண்டும். அதற்குள் மணியார்டர் வராவிட்டால் 47-ஆம் தொகுதியின் முதற்பகுதி வழக்கப்படி வி. பி. மூலம் அனுப்பப்பெறும். வி. பி. அனுப்பியபின்பு அதனைப் பெற்றுக்கொள்ளாது திருப்பிவிடுவதால் சங்கத்துக்கு வீண்செலவு நேரிடுமாதலால் தயைசெய்து வி. பி. யைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

7—8—51.
மதுரை.

S. சிவஸ்வாமி, மானேஜர்.
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி-௪௬.] விக்ருதி௵ ஆவணி—ஐப்பசி௴ [பகுதி. ௧௦—௧௨.

Vol. 46. August—November 1950 No. 10—12.

## தக்கயாகப்பரணி*

[திரு. தி. சேஷாத்திரி அவர்கள், ஆசிரியர், மதுரைக்கல்லூரி.]

பிரஜாபதிகளுள் ஒருவனான தக்ஷனுக்குத் தமிழ்தந்தபெயர் தக்கன் என்பது. அவன் ஒரு வேள்வி செய்தான். அது தக்க யாகமாகாது தகாதயாகமாயிற்று. அதையும் ஏனைத் தேவர்களோடு தக்கனையும் அழித்து வீரபத்திரதேவர்காட்டிய வீரத்தை ஒட்டக்கூத்தர் பரணி என்னும் பிரபந்தவகையால் பாடியிருக்கிறார். அதற்குத் தக்கயாகப்பரணி என்று பெயர்.

தக்கன் தான்செய்த வேள்விக்குத் தேவர்களையெல்லாம் அழைத்தான்; பழம்பகைகாரணமாக மருமகனான பரமசிவனை அழைக்கவில்லை. அவருடையதேவியும் தன்மகளுமான உமையம்மையையும் அழைக்கவில்லை. தேவியோ செல்ல ஆவல்கொண்டாள். அரன் 'தக்கன் அழைத்திலனே' என்று சொல்லிப்பார்த்தார். தேவி, 'பிழைத்தனன், பொறுத்தருளுக!' என்று சமாதானம் சொல்லிவிட்டாள். வெள்ளிமலைப்பெருமானான பரமசிவனுக்கு வருவதுதெரியும்; முகிழ்த்த முறுவலுடன் விடைகொடுத்துவிட்டார்.

* இது, திருச்சி வானொலிநிலையத்திலிருந்து 20—4—51 மாலை 7-45 மணிக்கு ஒலிபரப்பப்பட்டது. அவ்வானொலிநிலையத்தாரனுமதிபெற்று வெளியிடலாயிற்று. [பத்திராதிபர்.]

தேவி சென்றாள். தக்கன் வரவேற்கவில்லை; திரும்பிப்பார்க்கவு மில்லை; தங்கைகளும் அவமதித்தனர். தாட்சாயணிக்குக் கோபம் மூண்டது. செவ்வாய் மடப்பாவை உடனே மேருமலைச்சாரலுக்குத் திரும்பிச்சென்றுவிட்டாள். அங்கே பணியாளரான பதினெண் கணப்பெண்கள் பலபல சொல்லினர். முனிவு ஆறவில்லை. நேரே பரமனிடமே சென்றாள். அவரும் கவனிக்கவில்லை. சினம் சீறி யெழுந்தது. ஈசனுள் கரந்துநின்ற உமை அவனைப்பிரிந்து அன்னை வீடான இமயமலையையடைந்துவிட்டாள். சிவபெருமான் நிகழ்ந்த வற்றையெண்ணினார். பரபரப்பு ஏற்பட்டது. தேவர்மேல் அடங் காத சினம் எழுந்தது. முன் தேவர்களைக் காக்கும்பொருட்டுத் தாம் விழுங்கிய ஆலகாலவிடத்தை இன்று அத்தேவர்மேல் ஏவிவிட எண்ணினார். வீரபத்திரன் வந்துநின்றான். 'தக்கன் வேள்வி தகர்க்க' என்று ஆணையிட்டார்.

வீரபத்திரனும் திரண்டெழுந்த பூத பைசாசங்கள் ஆயிர மாயிரங்கோடி சூழவர இறைவனடிபணிந்து விடைகொண்டு தக் கன்வேள்விதகர்க்கச் சென்றான். எதிரிகள் எண்ணினும் வலியினும் பெரியர். படைக்கும் பிரமன், காக்கும் திருமால், எரிக்கும் அக்கினி, தகிக்கும் சூரியன், வசுக்கள், ஏகாதசருத்திரர், திக்குப் பாலகர், திக்கியானைகள், சந்திரன், மேகங்களுங்கூடத் தக்கன் பக்கமே துணைவரப் போர் எழுந்தது.

பெரும்போர், கடும்போர், மீண்டும் மீண்டும் மூண்ட நீண்ட போர். முடிவு என்ன? பிரமர்கள் மாண்டனர்; நெடுமாயனும் பட்ட னன்; தக்கனும் மாய்ந்தான்; என்றால் தேவரைப்பற்றிக்கேட்பா னேன்? அவர்முடிவும் அதுவேதான்.

பிறகு தேவி கருணைதூண்டப் பரமன் அருள்புரிகின்றான்; அமரர் உயிர்பெற்றுப் பதமும் பெறுகின்றனர். இக்கதையைத் தான் ஒட்டக்கூத்தர் பரணியில் பாடியிருக்கின்றார்.

பரணி போர்நூல். தமிழிலக்கியமரபில் போர், தீநெறிச்செல் லும் கயவரை ஒறுத்துக் காளிதேவிக்குப் பலியிட ஏற்கப்படும் ஒரு செயலாகும். பரணிநட்சத்திரம் காளி உகந்ததொருநாள்.

அவளுக்குக் கூழிடும்நாளும் அதுவே. ஆகவே. போரடுதலையும் கூழிடுதலையும் தன்பாற்கொண்ட இப்பிரபந்தத்துக்குப் பரணி என்று பெயர்வந்ததென்பர் பெரியோர்.

பரணி, போர்முகத்தில் ஆயிரம்யானைகளைவென்ற ஒரு வீரனை யோ இறுதிவரை வெற்றிகிட்டும்படி பெரும்போர்புரிந்த ஒரு வீரனையோ சிறப்பித்துப் பாடுவதாகும். தெய்வங்களின்மேலும் தத்தம் ஆசிரியர்மேலும் பரணிபாடினாரும் உளர். பரணிபாடுவ தில் ஆற்றல்மிக்கவர் ஜயங்கொண்டார். 'பரணிக்கோ ஜயங் கொண்டான்' என்பது ஆன்றோர்வாக்கு. அவர் இயற்றிய கலிங் கத்துப்பரணி சோழன்புகழ் பாடுவதாகும். தக்கயாகப்பரணி முதலியவை தெய்வங்களின்மேல் பாடப்பட்டன. இப்பரணிகள் வெற்றிபெற்றவர்போரால் வழங்காமல் தோல்வியுற்றவர்பெயரு டன் சார்ந்து வழங்குவது ஒரு விசேஷமாகும். பரணிகளில் கடவுள் வாழ்த்து கடைதிறப்பு முதலிய உறுப்புக்கள் அமைந்திருக்கும்; வீரனுடைய பலவகைச்சிறப்புக்களும் கலித்தாழிசையாற் பாடப் பெறும்.

இவ்விலக்கணங்களுடன் கூத்தர் இத்தக்கயாகப்பரணியைப் பாடியிருக்கிறார்.

வைரவக்கடவுள்விஷயமாய் அமைந்த காப்புடன் இந்த நூல் தொடங்குகிறது. கடவுள்வாழ்த்தில் உமைபாகர், விநாயகர், முருகக்கடவுள், அவரம்சமான திருஞானசம்பந்தர் என்போர் வாழ்த்துப் பாடப்பட்டிருக்கிறது.

கடைதிறப்பு, விஷ்ணு தாரணிந்த தம் மார்பையும், பிரமா தம் முகபிம்பத்தையும் தங்களுக்குத்தர இறைவிபாதமலரை அர்ச்சிக் கும் அவர்தம் தேவிகளை விளித்துத் தொடங்குகிறது. பிறகு கலவிப்போரில் ஈடுபட்ட தேவமாதரை அழைக்கிறார் கவி. பிறகு நூபுரஒலியும், கொழுநர்தலைமேற் பாவி மொய்த்தெழும் வண்டுக ளின் அலம்பலும் அதனின் மிக்கெழும் மேகலையின் புலம்பலும் தர வரும்படி நீர்நிலைகளிலே விடாதுறையும் நீரரமகளிரை அழைக் கின்றார். அதன்பின் மலைகளில்வாழும் தெய்வப்பெண்கள், வித்யா தரமகளிர், இராஜராஜபுரவீதிமகளிர் அழைக்கப்படுகின்றனர்.

இறுதி நான்குதாழிசைகளில் வாசவனார் குயிலாய் இறந்தகதை, இருள் ஆதித்தன்கண்ணுள் புகுந்த கதை, விட்டுணு ஒருதலை முக்காலிழந்தமை, தக்கன் ஊத்தைத்தலையொழிந்து ஒரு முருட்டு மோத்தைத்தலைபெற்றமை—பாட மூரிக்கபாடம் திறமினோ என்று கூறிக் கடைதிறப்பின் தன்மையை விளக்குகிறார்.

காடுபாடியதில் தேவிகுடிகொண்டிருக்கும் பாலைநிலத்தின் வெம்மை, தேவிகோவிலைச்சூழ்ந்துநிற்கும் சோலைகள் முதலிய எல்லாம் யாமளநூன்முறைப்படி விளக்கப்பட்டிருக்கின்றன. பிறகு எல்லாநான்மறைபரவும் இறைமானைச் சிறிதுரைக்கிறார். தொல்லை நாயகியுடைய பேய்களும் பாடப்பெறுகின்றன. அதற்கடுத்து அக்கணங்கள் வந்து சூழும் யோகயாமளத்தினுள் மெய்க்கணங்களேவிரும்பும் கோயிலைவிளம்புகிறார்.

கோயிலைப்பாடும் பகுதி ஒரு சுவைமிகுந்தபகுதி. அப்பகுதியிலேதான் ஆளுடையபிள்ளையார் சமணரை வாதில்வென்றகதை கூறப்படுகிறது. தேவி சரசுவதியிடமே அக்கதையைக்கேட்கிறாள். விசையை, எழுதெய்வமகளிர், வெள்ளைமுளரிமகள், மறிகடல்வையமகள், திருமகள் என்போருடன் வீற்றிருக்கும் தேவி சரசுவதியை அரவணையில் அருகே அமர்த்தி, 'வள்ளியைவதுவைமகிழ்ந்த என் மகன் மதுரையில் வெல்லும் இனியகதையைச்சொல்' என்று கட்டளையிடுகிறாள். சரசுவதியும் ஞானசம்பந்தப்பெருமான் பாண்டியனுடைய உடற்கூன் மனக்கூன் என்பவற்றை நீக்கி, அவன் மனைவி (மங்கையர்க்கரசி) மனமகிழச் சமணரை வாதில்வெல்ல அச்சமணர் தாமே கழுவேறியகதையைச் சொல்லுகிறாள். கதையைக் கூத்தரே சரசுவதியின்பேச்சாகப் பேசுகிறாரா? அல்லது நாமகள் தானே நவில்கிறாளா? என்று ஐயமெழச்செய்கிறது அப்பகுதி.

அவ்வமயம் பேய்கள்வந்து பசியால் முறையிடுகின்றன. இடையே ஒருகூளிவந்து காளிக்குச்சொல்லியதில் 'தக்கசங்காரம்' நுவலப்படுகிறது. பின்பு பேய்கள் போர்க்களஞ்சென்று இறைச்சிக் கூழடுகின்றன; தேவிக்கு இடுகின்றன. கூழுண்டகூளிகள் இப்பரணியை ஆக்குவித்தோனான இராஜராஜகெம்பீரனை வாழ்த்துகின்றன.

களங்காட்டலில் இறைவன், ஒருமருங்குடைய மூலநாயகியோடு வெள்ளைவிடையேறிவந்து, திருமாற்பேய் முதல் அன்று இகழ்ந்து இன்று நன்று வணங்கிநிற்கும் மாமடிப்பேய்வரை தேவிக்குக் காட்டுகிறார். தேவி இரங்கி 'என் நிமித்தம் இவர்கள் மடிந்தனர், சினந்தணிந்தருளுக' என்று தாளிற் பணிகிறாள். பரமனும் கருணை புரிகிறான். அமரர் உயிரும் பதமும் பெற்றுக் குனிசிலைவீரனை வாழ்த்திச் செல்கின்றனர். முடிவில் வாழ்த்துக் கூறப்படுகிறது.

இவ்வாறாக இலக்கணவரம்பு கடவாது இப்பரணியை அமைத்தாரென்றாலும் கவி இதிற் பல புதுமைகளையும் செய்திருக்கிறார்: கடவுள்வாழ்த்தில் பாட்டுக்குரிய வீரனைவாழ்த்தும் வழக்கத்தை விட்டு ஆக்குவித்தோனான ராஜராஜன் வாழவும் அவன் எழுதீவும் உடனாளவும் வேண்டியிருக்கிறார். கூழுண்டு கூளிகளும் அவனையே வாழ்த்துகின்றன. இறுதியிலும் அவனையே வாழ்த்தியிருப்பது கவி அவன்பாற்கொண்ட அன்பின் ஆழத்தைக் காண்பிக்கிறது. கோயிலைப்பாடும் பகுதியில் ஆளுடையபிள்ளையார்கதைவிரவியது கனிரசத்தொடு தேன்கலந்ததுபோன்றதொரு சிறப்புமாற்றமாகும். காளி பேய்களுக்குக் களங்காட்டியதாகக் கூறாமல் இறைவன் தேவிக்குக்காட்டுவதாகக் கூறியிருப்பது கதையின் தொடர்பு கெடாமலிருக்கக் கவிசெய்த ஒரு நூதனம்.

உருவமும் இதழ்களின் நிலையும் இவ்வாறாக, இந்தப் பூவின் தெவிட்டாத சுவையும் மணமும், மாறாத அறிவுநிறமும் மனதைக் கவருகின்றன. புதிய புதிய கருத்துக்கள், அரிய பல பொருள்கள்: இவை கவியின் கல்வியறிவுக்கும் நுண்மாண் நுழைபுலத்துக்கும் அறிகுறிகளாகும். அக்கருத்துக்களைச் சுவையமையப் புதுமை ததும்ப மனது ஏற்று மூக்கில் விரல்வைத்து மறக்குமா! மறக்குமா! என்று வியக்கும்வண்ணம் சொல்லும் வல்லமை கவியின்கவித்திறன். இந்த அறிவும் திறனும் இந்தப் பரணியில் ஒவ்வொரு தாழிசையிலும் சுடர்விடுகின்றன.

கவியின் புலமைக்கு எடுத்துக்காட்டாய்நிற்கவல்லது காடு பாடியது என்னும் பகுதி. அதில் கள்ளிவேலிகளை நினைவுறுத்துகிறார் கவி. அவைகளிடையேயுள்ள சிலந்திவலைகள் அவர் கவனத்தைக்

கவர்கின்றன. கவித்திறனுகிய தங்கத்தில் அந்த மாணிக்கம் புதைந்துவரும் விந்தையைப் பாருங்கள்:—

"பள்ளி வேலைவிடு கானநாடிபடை
பாடி வீடுகொள் படங்கெனக்
கள்ளிவேலிகளின் மீதெழுப்பல
சிலம்பி நூல்கொடு கவிக்குமே"

கானநாடியென்பது மயானவாசினியென்று பொருள்படும். கடற்பள்ளிவிட்டுவந்து விஷ்ணு துர்க்கையாய்ப் பாலையிலே தங்க, அவள் படைகளுக்குச் சிலந்திகள் கள்ளிவேலிகளின்மேல் நூல் கொண்டு கவித்து விடுகட்டிக்கொடுத்திருக்கின்றன.

பாலைநிலத்தில் மழைபெய்யாது; ஏன்? கவியையேகேட்போம்.

"யோக முதலிறைவி கோயின் மிசையிருதர்
யூதம்வரவலகை யொட்டுமே
மேக முருமொடற வெற்புமிறகொடற
மேலை யெயிறுகொடு வெட்டுமே"

தேவியின் பேய்ப்படை, அரக்கர் மேகம் மலைகள்: எவை வரினும் தம் மேற்பற்களால்வெட்டி விரட்டிவிடும் என்பது இதன் பொருள். மலையும் மழையும் தாண்டிய இடம் பாலையென்பதை, தெய்வநம்பிக்கையின் ஆதாரத்தில் இதைவிட அழகாக எவ்வாறு கூற முடியும்.

கோயில்பாடியதிலே கொஞ்சும் இத்தாழிசையைக் காணுங்கள்:—

"காதிற்கன கக்குழைமின் நிலகக்
கமழுங்குழன் முன்புகலந்தசையச்
சோதித்திரு நெற்றியில்நீறிலகச்
சுட்டிக்கலன் மீதுதுலங்கவுமே"

என்ன! நாம் ஒவ்வொருவரும் தாயாகிவிடவில்லை! கைகள் அங்கே வரும் குழவியையேந்த நீளவில்லை! கலந்தசையும் மணங்கொண்ட குழல் உச்சிமுகர நம்மை அழைக்கவில்லை! முன் உச்சியிற் சுட்டிக் கலனும் காதுகளிற் கனகக்குழையும் நம் கண்களையும் உள்ளத்தையும் கவரவில்லை! எல்லாவற்றிற்கும் மேலாக நெற்றியிலே அணிந்த நீறு நம் சென்னியையும் சித்தத்தையும் வணங்கவைக்கவில்லை!

இது கவித்திறன். கற்பனையால் பொருளைக் கண்ணெதிர்நிறுத்தி உயிர்கொண்டு இயங்கச்செய்யும் ஓர் ஆக்கப்போராற்றல்!

கடைதிறப்பு, சிங்காரரஸத்தின் சுனை. அதன் கரையிலே ஓரிரண்டு பெண்களைப் பார்க்கலாம். உள்ளம் பறிபோகும் அந்த இனிய கனவுக்கு அஞ்சாதவர் வாரீர்.

"உருகுஞ்சுரா ருயிருண்டன வுணர்வுண்டன வொழுகத்
திருகுங்குழ லரமங்கையர் திறமின்கடை திறமின்"

முருகிற்சிவந்த கழுநீர்மலரையும் முதிராஇளைஞர் ஆருயிரையும் திருகிச்செருகும் மங்கையரைக் கலிங்கத்துப்பரணியிற் காணலாம். நீராடுதுறையில் ஆடவர்களை அலையவைப்பதில் கம்பனுக்குங்கூட ஆசைதான். பெண்கள் நீர்மட்டும் ஒழுகக் கூந்தலைமுறுக்கிப் பிழிகின்றனரா? அல்லது வேண்டுமென்று விளைவுதெரிந்துதான் சுராருயிரையும் உணர்வையும் சேர்த்தே திருகுகின்றனரா? உண்மை எப்படியோ? திருகிப்பிழிந்துவிடுவது நிச்சயம். நமக்கும் உள்ளம் திருகுகிறது. மேலே செல்லுவோம்.

கற்பகக்காடுகள்போல்வரும் மேருமலைத் தெய்வப்பெண்களைப் பாருங்கள்:—

"அலகின் மரகத முறிகளும் வயிரமும்
அபரி மிதமெரி தமனிய மடையவும்
அரிய தாளமும் அழகிய பவளமும்
அரச வரவின சிகையவு மலைகொடு

கலக மறிகடல் புகவிடு வனகதிர்
கவடு விடுவன விவருழை யினுமுள
ககன தருவன மிவர்களு மெனவரு
கனக வரையர மகளிர்க டிறமினோ"

இதனுள் உவமைமுகத்தால் நிறத்தில் மரகதமுறிகள்; மனத்தில் வயிரம்; ஒளியில் அபரிமிதமாக ஒளிர்பொன்; பற்களில் முத்துக்கள்; திருவாயில் பவழம்; மருங்குலில் நாகராஜனின் தலைமணி; குயங்களிலே அமுதம்;—இவற்றையெல்லாம் தம்பால் ஏந்திவரும் மேருமலைத் தெய்வமகளிரைக் 'ககனதருவின்வனம் இவர்கள்' என்று வருணிக்கும் கவியின் சாதுர்யத்தை எவ்வாறு விவரிப்பது!

மேலும் தேவமாதரைக்கண்டு, அரனும் ஏனையிமையவரும் உண்பர் எனப் பயந்து நஞ்சும் அமுதுடன்சேர்ந்து ஒளிந்தது போன்றவர் என்று கவி வியக்கிறார். பெண்கள் நஞ்சுபோல்பவர் என்று நாம் அறிவோம். அமுதம் போல்பவர் என்பனைதயும் கம்பன் முதலியோர்கூற ஆம் என்று இசைந்தோம். இரண்டும் தனித் தனிக்காரணத்தால் அஞ்சி ஒரேயிடத்தில் ஒளிந்தபுதுமையைக் கூத்தர்கூறக் கேட்கின்றோம். இது அறிவு, புலமை, கவித்திறன்: மூன்றுங்கலந்த ரஸாயனம்; 'குயங்களில் அமுதையும் கண்களில் நஞ்சையும் கொள்க' என்கிறார் உரையாசிரியர், இரண்டையுஞ் சேர்த்து ஓரிடத்தில்வைக்க மனமில்லாதவர்போல்.

அவர்பால் அரன்பக்தி அதிகமா? அரசன்பக்தி அதிகமா? தமிழ்மொழியறிவு அதிகமா? வடமொழியறிவு மிகுதியா? என்ற வினாக்களுக்கு விடைபகர்வது எளிதன்று. அவர் கல்வியறிவு மேம்பட்டதா? கவித்திறன் மேம்பட்டதா? என்னும் வினாவும் முன்னே கூறியவற்றோடு சேர்க்கப்படவேண்டியதே.

வழக்கொழிந்தும் அழகுமாறாத பழந்தமிழ்ச்சொற்கள், இளமைமாறாத பல பதங்கள்: இவைகளைக்கொண்டு இலக்கண அமைதியொடு பின்னிய ஒரு மொழிவலை, அதன் உதவியால் அறிவுக்கடலிலிருந்து வாரிவாரியெடுத்த கருத்துக்களாக ஒளிரும் நன்முத்துக்கள், அவைகளைத் தக்கயாகம் என்ற நூலிலேகோத்துத் தொடுத்த ஒரு மாலை; அதை வயிரவக்கடவுளுக்குச்சாத்தி எடுத்து ராஜராஜசோழனுக்குச் சூட்டியிருக்கிறார் கூத்தர்பெருமான். அது தான் அவர் அறிவுச்சுரங்கத்திலிருந்து எடுத்துச்சேர்த்த சுவைக் குவியலான தக்கயாகப்பரணி.

சுபம்.

உ

# திருமுருகாற்றுப்படை

[திரு. வித்துவான். வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், திருவையாறு]

## நூலின்சிறப்பு.

இது சங்கத்துச்சான்றோர்செய்யுட்களிற் பத்துப்பாட்டில் முதலாவதாகும்; சைவத்திருமுறைகளிலே பதினோராந்திருமுறையிலும் இது கோக்கப்பெற்றுள்ளது; முந்நூற்றுப்பதினேழு அடிகளுள்ள ஆசிரியப்பாவான் அமைந்தது; முருகப்பெருமானின் திருவருள் பெறவிரும்பும் அன்பர்கள் அன்பொடு நாள்தோறும் ஓதிப் பயன் பெற உதவுவது. இதன் சிறப்பை ஆன்றோர்பலரும் புகழ்ந்துள்ளனர்.

"வளவாய்மை சொற்பிரபந்த முளகீர னுக்குவந்துன்
மலர்வா யிலக்கணங்கள்—இயல்போதி
அடிமோனை சொற்கிலங்க உலகா முவப்பவென்றன்
அருளா லளித்துகந்த—பெரியோனே"

எனவும்,

"கீதவிசை கூட்டி வேதமொழி சூட்டு
கீரரிசை கேட்ட க்ருபைவேளே"

எனவும் அருணகிரிநாதரும்,

"பாவுள் முன்னுறவக் கிற்கும் முருகாற்றுப்படை"

எனத் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகளும்,

"தவிராத வெவ்வினை தவிர்க்கும் முருகாறு"

என அந்தகக்கவி வீரராகவமுதலியாரும் இதனைப் புகழ்ந்துள்ளமை காண்க.

## நூலின்வரலாறு

தருமியின்பொருட்டுச் சிவபெருமான் எழுதி ஈந்தருளிய கொங்குதேர்வாழ்க்கை என்ற பாடல் பொருட்குற்றமுடைத்து,—

மகளிர்கூந்தலுக்கு இயற்கைமணம் உளது என்று அப்பாட்டின் கண் குறித்தது பிழையாம் என்று இறைவனோடு வாதாடியகாரணத்தால் 'குட்டநோய்' உறுக எனச் சாபம்பெற்ற நக்கீரனார், அச்சாப நீக்கத்தின்பொருட்டுக் கயிலைக்குச்செல்லும்வழியில் ஒரு மலைக் குகையிலே முன்னமே அடைக்கப்பட்டிருந்த தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரொடு சேர்த்துண்ணக்கருதித் தம்மையும் அடைத்துவைத்து நீராடச்சென்ற பூதத்தினின்றும் உய்யக் கருதி முருகக்கடவுளைக்குறித்துப்பாடியது இந்நூல் என்று கூறுவர். இவ்வரலாறு திருப்பரங்குன்றப்புராணம், திருவிளையாடற்புராணம், திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் முதலிய நூல்களிற் கூறப்பட்டுள்ளன.

## பெயர்ப்பொருள்

திருமுருகாற்றுப்படை என்பதற்கு வீடுபெறுதற்குச்சமைந்தானோர் இரவலனை வீடுபெற்றானொருவன் முருகக்கடவுளிடத்தே ஆற்றுப்படுத்தது என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் பொருள்கூறியுள்ளார். ஆற்றுப்படை என்பது தமிழிலுள்ள பலவகைப் பிரபந்தங்களில் ஒன்று. தொல்காப்பியம் புறத்திணையியலில்,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்"

என்பது இதற்கு விதி.

## நூற்பொருட்சுருக்கம்

எல்லாச்சமயத்தாரும் புகழும் பருதியங்கடவுள் கடலிலே தோன்றினாற்போல மனம் ஒன்றி நினைப்பாருள்ளத்திலே அறியாமையாகிய இருள் கெடும்படி மயிலின்மீதுதோன்றும் பேரொளிப் பிழம்பு முருகப்பெருமான்; அவன் தன்னையடைந்தாரது அறியாமையைநீக்கும் திருவடியுடையவன்; அழித்தற்கு உரியாரை

அழிக்கும் கையினன்; அறக்கற்புள்ள தெய்வயானையம்மை மணாளன்; கடம்புமாலைபுரளும் மார்பினன்; சூரரமகளிர்விளையாடும் மலையிற்றோன்றிய சுரும்புமூசாச் சுடர்ப்பூங்கண்ணிசூடிய முடியினன்;* அசுரர்வலியடங்கச் சூரபன்மாவாகிய மாய மாமரத்தைத் தடிந்த வேற்படையான். அவனது ஞானமயமாகிய திருவடிப் பேற்றைவிரும்பும் உள்ளத்தோடு நீ செல்லவிரும்புதியாயின் நீ தவறாமல் அதனைப் பெறுவை. அவன் தன்னை அடைந்தார்க்கு அருளும்பொருட்டு வீற்றிருக்கும் இடங்களைக் கேள். மாடமலி மறுகினையுடைய கூடல்நகரின் மேற்கேயுள்ள திருப்பரங்குன்றத்தில் விருப்புடன் அமர்ந்துளான்.

அதுவன்றி, அவனுடைய ஆறு திருமுகங்களிலே ஒன்று உலகில் இருளை நீக்கவும், ஒன்று ஆர்வலருக்கு அவர் விரும்பிய வரங் கொடுக்கவும், ஒன்று அந்தணர்புரியும் வேதவேள்விக்குத் தீங்குவாராது நினைக்கவும், ஒன்று முனிவர்களுக்கு வேதாகமப் பொருளை அறிவுறுத்தவும், ஒன்று அசுரர்முதலியோரை அழித்துக் களவேள்விசெய்யவிரும்பவும், ஒன்று வள்ளிநாச்சியாரோடு மகிழ்ச்சியைப்பொருந்தவும், அம்முகங்களுக்கு ஏற்பப் பன்னிரு கைகளும் பலவகைத்தொழில்புரியவும் திருச்சீரலைவாயிலும் வீற்றிருக்கின்றான்.

அதுவுமன்றி மரவுரியுடையும், வானரைமுடியும், மாசறு வடிவும், வாடியவுடலும், செற்றம்நீக்கியமனமும், கற்றோரின்மேம்பட்ட அறிவும், சினமற்ற முனிவர்கள் முன்னேசெல்லக் கந்தருவர்கள் இனிய யாழிசைபயிலக் கந்தருவமகளிர்சூழத் திருமாலும் இந்திரனும் உருத்திரனும் தத்தம் தொழில் நிலைபெறவும் அயனைப் பழைய படைத்தற்றொழிலிலே நிலைநிறுத்தவும் விரும்பி முப்பத்து முக்கோடிதேவர் பதினெண்கணங்களுடன் வான்வழியாகவந்து காணும்படி தெய்வயானையம்மையுடன் திருவாவினன்குடி என்னும் ஊரிலும் இருத்தலுரியன்.

அதுவன்றித் தமக்குரிய அறுவகைத்தொழிலும் தவறுதவர்களும் நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியங்காத்தவர்களும் முத்திச் செல்வரும் ஆகிய அந்தணர்கள் ஈரம்புலராத உடையினராய் உச்சிமேற் கைகுவித்துத்துதித்து ஆறெழுத்துமந்திரத்தை மெல்ல உச்சரித்து நறுமலரால் வழிபடும் ஏரகம் என்னும் ஊரிலும் இருந்தலுரியன்.

அதுவன்றி, வெறியாட்டாளனாகிய வேலன், வெறியாடக் காட்டுமல்லிகையையும் வெண்டாளியையும் பச்சிலைக்கொடியிலே கட்டின கண்ணியையணிந்தவனாய்க் கள்ளின் தெளிவைக் கானவரோடு உண்டு தொண்டகப்பறைமுழக்குக்கு ஏற்பக் குரவைக்கூத்தாடத் தன்னைச் சேவிக்கும் மடநடைமகளிருடன் வெட்சிமாலையைச் சூடிப் பல இயங்களை எழுப்பிக் கோழிக்கொடியை உயர்த்திப் பாடும் மகளிருடனும் மெய்தீண்டிவிளையாடற்குரிய மகளிருடனும் அவர்களுக்கு முதற்கைகொடுத்துக் குன்றுதோறும் விளையாடுதலையும் உரியன்.

அதுவுமன்றி, ஊர்தோறும் ஊர்தோறும் எடுத்த விழாவின்கண்ணும், அன்பர் விரும்பும் இடங்களிலும், ஆற்றிடைக்குறையிலும், ஆறுகளிலும், குளங்களிலும், பலவேறு ஊர்களிலும், சந்திகளிலும், கடம்பமரத்திலும், கந்துடைநிலையிலும், மன்றத்து மரத்தின் கீழும், அம்பலத்திலும், மலைப்பக்கங்களில் குறமகளிர் வெறியாடுகளங்களிலும் உறைதலுமுரியன்.

முற்கூறிய இடங்களிலேனும் வேறு இடங்களிலேனும் நீ அவனைக் கண்டபொழுது விரும்பித்துதித்துத் தலைமேற் கைகூப்பித்தொழுது 'அறுவர்பயந்த ஆறமர்செல்வ' என்பது முதலாகக் கூறித்துதித்து, "நின் தன்மையெல்லாம் அளவிட்டறிதல் மன்னுயிர்க்கு அரிது. நின் திருவடியைப்பெறவேண்டுமென்று நினைந்து வந்தேன்" என்று நீ கருதிய வீடுபேற்றினை விண்ணப்பஞ்செய்வதற்குமுன்னமே அவனுடைய பரிசனங்கள் உன்னைப்பற்றி அவன்பால், 'பெரும்! முதுவாயிரவலன் ஒருவன் நின்னைப் புகழ்ந்து

வந்தான். அளிக்கத்தக்கான்' எனக் கூறுவர். அப்போது முருகன் ஆங்குத் தன் பெரிய தெய்வவடிவத்தை உள்ளடக்கிக்கொண்டு தன் மணங்கமழ் தெய்வத்து இளநலங்காட்டி உன்னை 'அஞ்சல்' எனக் கூறி நீ விரும்பிய வீடுபேற்றினை அளிப்பான், அருவிகள் ஆர்த்து இழியும் பழமுதிர்சோலையில் உள்ள முருகப்பெருமான்.— என்பது இந்நூலின் திரண்டபொருளாகும்.

### சுவைத்து இன்புறத்தக்க பகுதிகள்.

இந்நூல் முழுவதும் சீரியகூரிய சுவைகனிந்த பொருள்செறிந்த செஞ்சொற்களால் ஆகியது. இதன்கண் சிறப்பாகப் பாராட்டிப் படித்து இன்புறவேண்டிய சில பகுதிகளைமட்டும் ஈண்டுக் குறிக்கின்றேன்.

முருகப்பெருமான் மயில்மீது தோன்றுவதற்கு "உலகமுவப்ப ... ... அவிரொளி" என்ற உவமை மிக அழகிது. இதனைப் பின்பற்றியே அருணகிரிநாதரும் "உததியிடைகடவும் ... ... மயிலின்மிசை உகமுடிவுள் இருளகல ஒருசோதி வீசுவதும்" என்றார்.

சூரரமகளிர் ஆடையணிகளும் அவர்கள் விளையாட்டும் இன்பம் பயப்பன. பேய்மகள்வடிவமும் போர்க்களத்தில் அவள் தலையொன்றைக் கையிலேந்தி ஆடுதலும் அச்சம்பயக்கும்.

திருப்பரங்கிரியிற் சுனை வண்டுகளின் இன்பவாழ்வு படிப்போர்க்கு இன்பந்தரும்.

முருகப்பெருமானது திருமுகங்களாறும் திருக்கைகள் பன்னிரண்டும் செய்யும்செயல்கள் அவனே உலககாரணன்; அவனன்றி அணுவும் அசையாது என்பதைப் புலப்படுத்தும். கந்தர்கலி வெண்பாவில் முருகனது திருமுகங்கள் கைகள் செய்யும் தொழில்களாகக்கூறப்பட்டுள்ளவற்றிற்கும் இதற்கும் வேறுபாடு கண்டுணர்தல்வேண்டும்.

திருவாவினன்குடிப்பகுதியில் முனிவர்களது தூயதன்மை அழகாகக் கூறப்பட்டுள்ளது. முருகப்பெருமான் மும்மூர்த்திகளாலும் வழிபடப்பெறும் முழுமுதற்பொருள் என்பதும் இப்பகுதியால் விளங்கும். திருவேரகத்தில் அந்தணர்கள் வழிபடும் முறைபயபக்தியைக் காட்டுகிறது. குன்றுதோறாடலில் வேலன் வெறியாடும்முறையும் மலைதோறும் இறைவன்விளையாடும் முறையும் இன்புற எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன.

பழமுதிர்சோலைப்பகுதியில் முருகன் வாழும் இடங்கள் பல கூறப்படுகின்றன. வெறியாடுகளன் வர்ணிக்கப்படுகிறது. முருகனை முன்னிலையாகப் புகழும் தொடர்மொழிகள் உள்ளத்தை ஊக்கத் தக்கவை.

பழமுதிர்சோலையினின்று இழிதரும் அருவிவருணனை மிக அழகியது.

இத்தகைய சிறந்த செந்தமிழ் அருட்பனுவலை அன்புடன் ஓதி ஆராய்வார்களுக்கு முருகன் எல்லாநலங்களையும் எளிதில் அருளுவான்.

"நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறுஞ் சாற்றினல்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தாநினைத்த வெல்லாந் தரும்"

# தமிழ்வளர்ச்சி

[திருவாளர். சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள், சென்னை.]

தமிழ்வளர்ச்சிசம்பந்தமாக இப்போது நாட்டிலே பல கிளர்ச்சிகள் ஏற்பட்டிருப்பது அனைவரும் அறிந்ததே. தமிழ்ப்பேரகராதி ஒன்று எழுதுவித்தலும் அக்கிளர்ச்சிகளுள் ஒன்றெனலாம். பல தமிழ்ப்பத்திரிகைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. தமிழ்மீதுள்ள பற்றினால் சிலர் தமிழ்ச்சொற்களையே எழுத்திலும் பேச்சிலும் வழங்க வேண்டுமென்றுகருதி வழக்காற்றிலுள்ள பல வடசொற்களை நீக்குகின்றனர். பிறபாஷைச்சொற்களை விலக்கவேண்டியது அவசியமே. ஆயினும், பல காலமாக வழக்கத்தில் வந்துள்ள சொற்களை இப்போது நீக்குதல் தகுதியன்று.

தமிழ்வளர்ச்சியில் ஊக்கமுடையவர்கள் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அது யாதெனின் தமிழுக்குச் சிறப்பாக அமைந்துள்ள மரபென்னும் இலக்கணமாம். இவ்விலக்கணம் பிற பாஷைகளுக்கு இல்லையென்ப. மரபு இன்னதென்பதை,

> "எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
> செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே"

என்னுஞ் சூத்திரத்தாலும், அது மயங்கக்கூடாதென்பதை,

> "மரபாம் எழும் மயங்கினும் வழுவே"

என்னுஞ் சூத்திரத்தாலும் நன்னூல் சுருக்கிக்கூறியுள்ளது. தொல்காப்பியமோ அதை மிக விரிவாகக்கூறியுளது.

அது, "மரபுநிலைதிரியா மாட்சியவாகி" என்று அகத்திணையியலிலும், "மரபேதானும்" என்று செய்யுளியலிலும் கூறிய அளவில் நில்லாது, அதனை வற்புறுத்துவதற்கு நூலிறுதியில் மரபியல் என்று ஒரு தனிஇயலையும் கொண்டுளது.

மரபாவது: இஃது பறழ், இஃது பிள்ளை, இஃது குழவி என்று உரைப்பதுமாத்திரமன்று. அந்தணரைப் பாடும்போது இவ்வாறு பாடவேண்டும். வேளாளரைப் பாடும்போது இப்படிப் பாடல்வேண்டும். உலாப்பாடுவதாகில் இங்ஙனம் பாடவேண்டும்: என்னும் நியதிகளும் மரபாம். இறைவனூலுக்கும் உயர்ந்தோர்வழக்கிற்கும் மாறுபடாமையே மரபிற்குப் பொதுவிலக்கணமாம். "மரபுநிலைதிரியிற்

பிறிதுபிறிதாகும்" என்று தொல்காப்பியம் மரபை நன்று வற்புறுத்தியுள்ளது.

ஆனால் இப்போது இயற்றப்படும் நூல்களுட் பல மரபு நிலை திரிந்திருக்கின்றன. இதனைக் கவனித்துத் திருத்தவேண்டியது தமிழன்பர்கள் கடமையாகும். தமிழ் தன்னடையிழந்தால் தமிழாகாது. தமிழ்மரபு தமிழில் மிக்க பயிற்சியில்லாதவர்களுக்குத் தெரியாது. அவர்கள் தமிழை ஆங்கிலத்தைப்போல் மதித்து நடாத்துகின்றனர். மரபுமயங்கச்செய்வதெல்லாம் தமிழைக் கெடுப்பதாகுமேயன்றி வளர்ப்பதாகாது. தமிழபிமானிகள் இதனைச் சிந்திப்பார்களாக.

சில ஆண்டுகளாக வெளிவரும் நூல்களிலும் பழையநூல்களுக்குச் செய்யப்படும் புத்துரைகளிலும் ஏற்கெனவே, தயார், சாப்பாடு, அக்கரை: என்பன போன்ற பல சொற்கள் காணப்படுகின்றன. இவையெல்லாம் தமிழ்ச்சொற்களல்ல. ஆதலால் இவற்றைத் தமிழ்வசனநடையில் நீக்கவேண்டும்.

மேலும், காணப்பெறும், கூறப்பெறும், பதிப்பிக்கப்பெற்றது, விரும்பப்பெறும், வழங்கப்பெறும் என்று பேசுகின்றனர்; எழுதுகின்றனர். இவற்றுக்குப் பழையநூல்களில் ஆட்சியில்லை. "படும்" என்பதே சரியானது. இதனைவிடுத்துப் "பெறும்" என்று வழங்குவது மரபன்று. "படும்" என்பது திருக்குறளில் மிகுதியாக வந்துள்ளமை கவனிக்கத்தக்கது.

"செயப்பாட்டுவினையை உணர்த்தும் விகுதிகள் படு, உண் என்னும் இரண்டுமாமென்று பழைய இலக்கணநூல்கள் விதிக்கவும், தொல்காப்பியரே தமது முதற்சூத்திரத்தில் "எழுத்தெனப் படுப" என்றும், திருவள்ளுவர் 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை' என்றும் சொல்லியிருக்கவும், எழுத்தும் அறனும் இன்னும் சாவாமலிருக்கவும் "படு" என்பது அமங்கலச்சொல்லென்று பயந்து அதனை விலக்கிப் "பெறு" என்றொரு புதுச்சொற்கொள்ளுவது முறையாகாது.

தமிழ்ப்பேரகராதி எழுதும் குழுவினரும் பிறரும் இன்னோரன்ன தமிழ்மரபைப் பெரிதும் பேணுவார்களென்று நம்புகிறேன்.

உ

# நாலடியார்—இருவருரைத்திருத்தம்

[திரு. சத்திமீவாகீசுவரையரவர்கள், தமிழ்ப்பண்டிதர், திருவநந்தபுரம்]

[௧எசு-ஆம் பக்கத் தொடர்ச்சி]

அதிகாரம்—கீழ்மை. பாட்டு—7.

11 மைதீர் பசும்பொன்மேன் மாண்ட மணியழுத்திச்
செய்த தெனினுஞ் செருப்புத்தன் காற்கேயாம்
எய்திய செல்வத்த ராயினுங் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும்.

இ—ள். மைதீர் - குற்றமற்ற, பசும்பொன்மேல் - பசுமை நிறமுடைய பொன்னில், மாண்ட மணி அழுத்தி-உயர்ந்த இரத்தினங்களைப்பதித்து, செருப்புச் செய்தது எனினும்- (ஒரு மூடனால்) செருப்புச் செய்விக்கப்பட்டதாயினும், தன் காற்கே ஆம் - அது அவன் காலிலிட்டுக்கொள்ளுதற்கே பயன்படும்; தலைமுதலான அவயவங்களிலிட்டு அவனை அலங்கரித்துக்கொள்ளப் பயன்படுவதன்று.( அதுபோல), எய்திய செல்வத்தராயினும்-(முயன்றுதேடத் தகுதியற்றவராய்த்) தானுகவந்துசேர்ந்த செல்வத்தையுடையராயினும், கீழ்களை - அந்த மூடர்களை (அச்செல்வத்திற்கேற்ற பெருந்தன்மைக்குரியரல்லாதவரை), செய்தொழிலாற் காணப்படும்- அவர் செய்கிற தொழில்களால்,(செல்வத்திற்கேற்ற பெருந்தன்மை வந்துவிட்டதா அன்று? நெருங்கத்தக்கவரா? அல்லரா? என்பது அறியத் தகும் என்றவாறு.

பொட்டெனச் செல்வம்வந்ததுபோல அதற்கேற்ற பெருந்தன்மைகளும் உடன்வருவனவல்ல. தமக்குக்கிடைத்த செல்வத்தாற் செய்தற்குரியனசெய்து பேரும் புகழும் பெறக் கருதார். "ஏதிலார்ஆரத் தமர்பசிப்பர் பேதை பெருஞ்செல்வ முற்றக்கடை" (குறள்837)என்பதுபோல அவர்செல்வம் நேரியவழியிற் பயன்படுவதன்று; அவாழிவிற்குப் பயன்படுவதாம். அதனால் அவரைபடுத்து உதவிபெறக் கருதவேண்டா என்பது எஞ்சிநின்றது. ஏ ஆயினும் எனினும் என்பவை பிரிநிலைகள்.

எய்தியசெல்வத்தர்—புதையல், ஸந்ததிபற்றுவந்தது முதலிய வற்றால்வந்த செல்வத்தர். இவரைப் புதுப்பணக்காரர் என்பர். மைதீர்தலாவது - சேர்ந்திருக்கும் பிறவுலோகங்கள் நீங்குதல்.

எய்தியசெல்வத்தர் என்பதற்குப் பொருந்திய செல்வமுடைய வர் என்றார் இருவர். ஏ-பிரிநிலையோடு இழிவுசிறப்பு என்றார் அவர்; இழிவுசிறப்பு ஆண்டில்லை.

350 ஆம் பாட்டுடன் பின்னிரண்டடிகள் ஒத்திருக்கின்றன. எய்தியசெல்வத்தரான கீழ்களுக்குப் பொன்னின் மணியழுத்திய செருப்பு உவமை. கீழ்கள் என்பது பலவின்பால்; அதனால் காணப்படும் என்பதற்கு எழுவாயாகும்.

அதிகாரம்—செல்வநிலையாமை. பாட்டு—1.

12 அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.

இ—ள்.— அறுசுவை உண்டி - ஆறுவகையான சுவைகளையு முடைய உணவை, இல்லாள் அமர்ந்து ஊட்ட - மனைவி விரும்பி உண்ணும்படிசெய்ய, மறு சிகை நீக்கி - பிந்தினநேரத்து உணவை வேண்டாமென்று ஒழித்து, உண்டாரும் - நிரம்ப உண்ட செல்வரும், வறிஞராய் - தரித்திரர்களாய், ஓரிடத்துச்சென்று - வேறோரிடத்திற் போய், கூழ் இரப்பர் - கஞ்சியைவேண்டுவர், எனின் - என்றால், செல்வம் ஒன்று - செல்வம் என்னும் ஒரு பொருள், உண்டு ஆக - நிலையுள்ளதாக, வைக்கற்பாற்று அன்று - கொள்ளத்தக்கதன்மையுடையதன்று என்றவாறு.

அறுசுவையாவன:—உவர்ப்பு, தித்திப்பு, புளிப்பு, கார்ப்பு, கைப்பு, துவர்ப்பு என்பன. சிகை - முடித்த குடுமி. அது உவமையாகுபெயராய்ப் பிடியளவான உணவைக் குறிக்கின்றது. பலபிடிகள்சேர்ந்தது ஒருநேரத்துணவு. அது சினையாகுபெயர். விரல்களைமடக்கிப்பிடித்த உணவு சிகைபோன்றிருப்பதாம்.

அதனால் மறுசிகை என்பது பிந்தினசோத்துச்சாப்பாடு என்ற பொருளை உணர்த்துகிறது. இங்கே மறு என்பது மறுமை, மறுநாள், மறுதாரம் என்பனபோலப் பிந்தின என்றபொருளில் வந்தது. ஒருநாளைக்குவேண்டுவது சாதாரணமாக இரண்டுவேளையுணவு. "உண்பது இருபொழுதொழிய மூன்றுபொழுதுண்ணேம்" என்றார் தேரையரும். இந்நூலுள்ளும் "முற்றுற்றுந் துற்றினை நாளும் அறஞ்செய்து பிற்றுற்றுத் துற்றுவர் சான்றவர்" எனவும், இருசிகையுமுண்டீரோ எனவும் வருதல் காண்க. முந்தினவேளையுணவு கனமுள்ளதாயிருந்தால் பிந்தினவேளையுணவை வேண்டாமென்று விலக்குதல் இயல்பாம்.

செல்வம் நிலையற்றது என்பது பாட்டின்கருத்து. வைத்தல் - கொள்ளுதல். 'வையார்வடித்தநூலார்' என இந்நூலுள் (163) வருதல் காண்க. எனின் என்பது பிரிநிலையிடைச்சொல்.

இனி, இருவருரைகாரர் இனைத்தென்றறிபொருளான அறுசுவைக்கு உம்மைகொடாது எழுதினர்; அவ்வும்மை பாட்டில் விகாரத்தால் தொக்கது. மறுசிகைநீக்கியுண்ணலாவது என்று தொடங்கி ஒவ்வொருவகையுணவிலும் முதல் எடுத்துக்கொடுத்த கவளத்தைமாத்திரம் உண்டு இரண்டாவதுகவளத்தை அடியோடு வேண்டாவென்று விலக்குதல் என்று முடித்தார். ஈண்டு உண்ணலாவது என்னும் எழுவாய்க்கு விலக்கல் என்பது பயனிலையாதல் பொருந்தாமையறிக. இனி அவர் சொன்னபடி விலக்கற்கு முதலிற் கொடுத்த உணவு அத்தனை ருசிகெட்டிருந்ததுபோலும். மறுசிகை-பண்புத்தொகை என்றார்; மறு என்பது பிந்தின என்னும் பொருள் படுவதோரிடைச்சொல். ஆதலால் அது இடைச்சொற்றொடராம்.

அதிகாரம்—தூய்தன்மை. பாட்டு—2.

13 தோற்போர்வை மேலுந் துளைபலவாய்ப் பொய்ம்மறைக்கும்
மீப்போர்வை மாட்சித் துடம்பானால்—மீப்போர்வை
பொய்ம்மறையா காமம் புகலாது மற்றதனைப்
பைம்மறியாப் பார்க்கப் படும்.

இ—ள். உடம்பு—மக்களுடம்பு, தோல்போர்வை—தோலாகிய ஒரு போர்வை, மேலும், துளைபலவாய் - பலதுளைகளுடையதாய், பொய் மறைக்கும் - பொய்யை மறைக்கிற, மீப்போர்வை மாட்சித்து - மேற்போர்வையின் மாண்பையும் உடையது, ஆனால், மீப்போர்வை - மேலே நாம் போர்த்துக்கொள்ளும் போர்வை, பொய் மறையா - (மெய்யை மறைப்பதன்றிப்) பொய்யை (- உள்ளேயுள்ளவற்றை) மறைக்கமாட்டாது, காமம் புகலாது-ஆசைகள் புகா, பைம்மறியாப்பார்க்கப்படும் - பையைப்போல மறித்துப் பார்க்கத்தகும் என்றவாறு.

தோலாய்ப் போர்வைபோல இருப்பது எது அது தோற்போர்வை என அன்மொழித்தொகை. போர்வை - உடம்பைப் போர்ப்பதற்கு (மூடுதற்கு)க் கருவியாகவுள்ளது. உடம்பை ஒரு தோற்போர்வை என்றும் அதுவன்றி விசேடமுடைய ஒரு மீப்போர்வையுமாகுமென்றும் உருவகப்படுத்திப் பிறகு அவ்விசேடங்களை எடுத்துக்காட்டுமுகத்தால் நூற்போர்வையை மற்றையதனின்றும் பிரிக்கிறார். இருவகைப்போர்வைக்குமுள்ள பொதுத்தன்மை - மறைத்தல். உடம்பாகிய மீப்போர்வைக்குள்ள விசேடங்கள்-பைம்மறியாப் பார்க்கப்படாமையும், துளைபலவாதலும் பொய்ம்மறைத்தலுமாம். பொய் என்றது தோற்போர்வையின் அகத்துள்ளவற்றை. அவை பொய்போல மறைக்கப்படுதலின் அவற்றைப் பொய் என்றார். மீப்போர்வை எ்பது பருத்திநூல் முதலியவற்றால் ஆக்கப்பட்டு உடம்பை மறைப்பதற்கு உபகாரமாகவுள்ளது. இனி, மீப்போர்வை, "பொய்ம்மறையா காமம் புகலாது ... பைம்மறியாப் பார்க்கப்படும்" என்றாரேனும், தோற்போர்வை பொய்ம்மறைக்கும், காமம் புகலும், பைம்மறியாப் பார்க்கப்படாது என்பன தெரிவித்தலே அதற்குப் பயனாகக்கொள்க. இத்தகைய போர்வையால் தன்னை மறைத்துக்கொண்டிருப்பவன் ஆன்மா என உடம்பின் தூய்தன்மை விளக்கியவாறு. போர்வையின் இருபக்கமும் ஒன்றாய்ப் பார்க்கத் தக்கதாயிருத்தல்பற்றிப் பையை அதற்கு உவமையாக்கினார்.

'மேலே அழகிதாயிருக்கிற பையை உட்புறம் திருப்பிப்பார்த்தால் அதிலுள்ள ஆபாஸம் விளங்குவதுபோல' என்றார் இருவர். இக்காலத்துச் சில பைகள் அவர் சொல்லுகிறபடி இருக்கலாம். ஆனால் 2000 வருடங்களுக்குமுன் பை அவ்வாறிருக்கவில்லை. உள்ளும் புறமும் ஒன்றாகவேயிருந்தது. அவர்காட்டிய மேற்கோள் இரண்டும் என் உரையைப் பாதிப்பனவல்ல.

ஆனால் என்பது பிரிநிலை. இதற்கு இருவர் ஆதலால் என்று பொருள்கூறினர்; அது ஏதுப்பொருட்டாதலின் பொருந்தாது. போர்வை - போர்க்கப்படுவதன்று, போர்த்தற்குச் சாதனமாகவுள்ளது.

அதிகாரம்—கற்புடைமகளிர். பாட்டு—5.

14 எஞ்ஞான்று மெங்கணவ ரெந்தோண்மேற் சேர்ந்தெழினும்
அஞ்ஞான்று கண்டேம்போல் நாணுதுமால்—எஞ்ஞான்றும்
என்னை கெழீஇயினர் கொல்லோ பொருணசையாற்
பன்மார்பு சேர்ந்தொழுகு வார்.

இ—ள். எஞ்ஞான்றும் - எந்நாளும், எம் கணவர் — எம்முடைய நாயகர், எம் தோள்மேல் சேர்ந்தெழினும் - எமது தோள்களை அணைந்தெழுந்தாலும், அஞ்ஞான்று கண்டேம்போல் நாணுதும் - மணம் நிகழ்ந்த அந்நாளில் யாம் புதிதாகக்கண்டு நாணியது போல் இப்பொழுதும் நாணுகின்றேம்; (பெண்ணியல்பு இவ்வாறிருக்க), பொருள் நசையால் - பொருளாசையால், எஞ்ஞான்றும் பல் மார்பு சேர்ந்து ஒழுகுவார் - எப்போதும் அவ்வப்பொழுது வரும் பலர் மார்பையும் கூடிபொழுகும் பரத்தையர், என்னை கெழீஇயினர்- பெண்களை விட்டுநீங்காத அத்தகைய நாணத்துடன்) என்னவுரிமையுடையர்? ஒருரிமையுமிலர் என்றவாறு.

அவர் நாணங்கெட்டவர் என்பது பொருள். நாங்களும் உங்களைப்போன்றவர்களேயென்ற பரத்தையரைநோக்கிக் கற்

புடைய மாதரொருவர் கூறியது. சொல், ஓ, ஆல் அசைகள். கண்டேம் போல் - நாணத்தை எம்மிடத்துக் கண்டதுபோல. நாணுதும் - இப்பொழுதும் நாணுவேம்; எம்மிடத்தில் நாணத்தைக் காண்கிறேம். கணவர்-கண்போல் இன்றியமையாதவர். கண்டேம் என்னும் வினைக்குச் செயப்படுபொருள் நாணம். எஞ்ஞான்றும் என்றாரேனும் இணைவிழைச்சிற்கு ஆகாவென்று விலக்குண்டநாட்களைத் தள்ளியே உரிமைகொள்ளப்படும்.

அதிகாரம்—இரவச்சம். பாட்டு—9.

15 ஒருவ ரொருவரைச் சார்ந்தொழுக லாற்றி
வழிபடுதல் வல்லுதல் அல்லால்—பரிசழிந்து
செய்யீரோ வென்னானு மென்னுஞ்சொற் கின்னாதே
பையத்தான் செல்லு நெறி.

இ—ள். ஒருவர் ஒருவரைச் சார்ந்து-ஒருவர் பெரியரான மற்றொருவரை அடுத்து, ஒழுகல் ஆற்றி - ஒழுகுதலைச்செய்து (தாம் நல்லவராய்நடந்து), வழிபடுதல் வல்லுதல் அல்லால்- அவர்க்குப்பணிவிடைசெய்தல் (அவரிடமிருந்து தாம் கல்வியில்) தேர்ச்சிபெறுதல் என்ற இவை அல்லாமல், பரிசு அழிந்து—அவர்க்குத் தம்மிடமுள்ள மதிப்புக் கெடும்படி, என்னானும் செய்யீரோ - எனக்கு ஏதாவது சிறியவுதவிசெய்யீர்களா?, என்னும் சொல் - என்று அவரிடம் சொல்லுகிற தமது இரப்புச்சொல், பையத் தான் செல்லும் நெறிக்கு-தான் அறிவுடைமையுடன் செல்கிற செவ்வியநெறிக்கு, இன்னாது-நல்லதன்று, ஏற்றதன்று என்றவாறு.

"பையச்சென்றால் வையந் தாங்கும்" என்பதிற் போல ஈண்டும் பொருள் கொள்ளத்தக்கது. அதாவது பையச்செல்லுதல் - அவசரப்படாமற் செல்லுதல்; அவசரப்பட்டுச்செல்வார்க்கு வழியில் மேடு பள்ளம் முள் முதலியன அறியமுடியாது. அதனால் ஆபத்தும் குறைச்சலும் நேரும். வழியின்விடப்பையறிந்து பையச்

செல்வார்க்கு அவையில்லை. ஆகவே வழிபற்றிய அறிவுடன் மெல்லச்செல்லுதல் என்பது பொருளாயிற்று. அது, கௌணநெறியால் செவ்விய ஒழுக்கநடைக்குப் பெயராயிற்று.

குவ்வுருப்பிரித்துக்கூட்டிப் பொருள்கொள்ளப்பட்டது. அழிந்தென்பது அழியவெனத் திரிக்கப்பட்டது. செய்மீரோ என்பது னுள் ஓ வினா.

இருவர், வழிபடுதல் வல்லுதலல்லால் என்பதற்கு 'வணக்கத்தோடிருத்தலை வல்லவராயிருப்பது முறையேயல்லாமல்' என்று உரைகூறினர்.

பைய என்பது மென்மைக்குறிப்புணர்த்தும் உரிச்சொல்; செல்லுதற்கு அடையாய்நின்றது.

சொல் எழுவாய். இன்னாது பயனிலை.

தான் என்பது ஒருவரைக் குறிப்பது. அது முடிபிற்கு ஒத்ததன்று. இவ்வாறே வேறு ஒவ்வாதனவும் இந்நூலிற் சில காணப்படுகின்றன. அவைபற்றிய ஆராய்ச்சி நாலடியார் வரலாற்றின்கண் செய்யலாமென்று ஈண்டாராயவில்லை.

அதிகாரம்—இன்மை. பாட்டு—4.

16 உண்டாய போழ்தி னுடைந்துழிக் காகம்போல்
தொண்டா யிரவர் தொகுபவே—வண்டாய்த்
திரிதருங் காலத்துத் தீதிலிரோ வென்பார்
ஒருவரு மிவ்வுலகத் தில்.

இ—ள். உண்டாயபோழ்தின் - செல்வமுண்டானகாலத்தில், உடைந்துழிக் காகம்போல் - (உயிர்நீங்கி) உடம்புடைந்தால் (பிணமானால்) அப்பொழுது அதனைத் தின்பதற்குக் காக்கைகள் கூடுவதுபோல, தொண்டாயிரவர்தொகுப - தொண்டுசெய்தற்கும் ஆயிரம்பேர் வந்துகூடுவார்கள், வண்டாய்த்திரிதருங்காலத்து - வண்டுகள் தேனுக்குத்திரிவதுபோல உணவுவேண்டி ஊரூராய் அவர் திரிகிற காலத்தில், தீதிலிரோ என்பார்-உங்களுடம்பு தீதின்றியிருக்கிறதா

என்று க்ஷேமம்விசாரிப்பவர்கூட, ஒருவரும் இவ்வுலகத்து இல் - யாரும் இந்தவுலகத்தில்லை என்றவாறு.*

ஆ! மனிதரியல்பிருந்தபடி என்னேயென்பது இசையெச்சம். கொடுப்போனிடத்தில் அன்பும் ஆதரவும் இன்றிப் பிடுங்கித்தின்பதே கருத்தாகக்கொண்டு கூடுகிற மனிதர்க்குப் பிணந்தின்னிக்காக்கைகளை உவமைகூறியதால் பயனுவமத்துடன் தொழிலுவமமுமாம். இனி, அஞ்சுதற்கேதுவான ஒன்றைக்கண்டு மனமுடைந்து ஒன்றுகரையப் பிறவுங்கரைந்துகொண்டு ஓரிடத்திற்கூடுவதனை உவமையாகக்கொண்டால் தொழிலுவமையாம். எ—அசை. ஆய் - உவமவுருபு. ஓ - வினா. காலமிடையிட்டுப் பழகினவரொருவரைக்கண்டால் உடம்பு விச்சாவிருக்கிறதா? விச்சாவிருக்கிறாயா? என்று க்ஷேமம்விசாரிப்பது வழக்கம். வித்துப்போல் கேடின்றியிருக்கிறாயா என்பது அதன் பொருள். தீதிலிரோ என்பதும் அப்பொருட்டு. பழகினவரைக் காலமிடையிட்டுக் கண்டவிடத்து அழைத்து உபசரிக்கவேண்டுவது மக்கட்டன்மை. அஃதில்லையாயினும் க்ஷேமம்விசாரித்தலாவது வேண்டும். அதுவும் செய்வாரிலர் என்னும் நினைவிற்றாகையால் என்பார் என்பதில் இழிவுசிறப்பும்மை தொக்கது. க்ஷேமம் விசாரிப்பார் அரியராதல் பற்றி ஒருவருமில் என்றார். உடம்பு உடைதல் - சட்டிபானைகள் உடைந்தன என்பது போலவது.

---

*இச்செய்யுளுக்கு, 'உண்டாயபோழ்தில் காகம்போல் ஆயிரவர் தொண்டு தொகுப; உடைந்தழி (உணவுவேண்டி) வண்டாய்த் திரிதருங்காலத்துத் தீதிலிரோ என்பார் இவ்வுலகத்து ஒருவரும் இல்' என்று அந்வயித்துப் பொருளுரைத்தல் சிறக்கும். இங்கு உடைந்தழி என்பது செல்வம் அழிந்தநிலையில் என்று பொருள்படும்.

செல்வம் உடையானைப் பழுமரத்தைத்தேடியடையும் பறவைபோலப் பலருந் தேடிச்சென்றடைந்து பயனுகர்வர். அவ்வாறு தாம் தேடிச்சென்றடைந்து பயனுகர்ந்த செல்வனே வறியனாய்த் தன் உணவின்பொருட்டுப் பலரையுஞ்சென்றுசாருநிலையில் (தாம் தேடிச்செல்லவேண்டாமலே அவனே தம்மை நாடிவந்தகாலத்து) அவனுக்குவேண்டியவற்றைத்தந்து உபசரியாவிட்டாலும் அவனைநோக்கிப் பேச்சளவில் சேமம் விசாரிப்பாரும் இலர் என்பது இதன் இரண்டபொருளாகும். [பத்திராசிரியர்.]

ஸ்ரீ:

# மதிப்புரை

பெரும்பாணாற்றுப்படையாராய்ச்சியும் உரையும்:—அண்ணாமலைபல்கலைக் கழகவெளியீடு. எழுதியவர்: பர்ஷாகவிசேகரர் மஹாவித்வான் ரா. இராகவையங்காரவர்கள். கிடைக்தும் இடம்: அண்ணாமலைபல்கலைக்கழகம்.

பெரும்பாணாற்றுப்படையென்பது தொண்டைமான் இளந்திரையனைப் பாட்டுடைத்தலைவனாகக்கொண்டு கடியலூர் உருத்திரங்கண்ணன் என்னும் புலவர்பெருமானால் இயற்றப்பட்டது. சங்க மருவியதொகைநூலாகிய பத்துப்பாட்டுள் ஒன்று; பரிசில்பெற விரும்பிய பாணன் ஒருவனை அது பெற்றானொருவன் தொண்டைமான் இளந்திரையனிடத்தே ஆற்றுப்படுத்தியதாகப் புனைந்துரைப்பது. அடியளவாற் பெரியதாதலின் இதனைப் பெரும்பாணாற்றுப் படையென்பர் ஒருசாரார்; பெரும்பாணச்சாதியான் ஒருவனை ஆற்றுப்படுத்தியதாதலிற் பெரும்பாணாற்றுப்படையாயிற்றென்பர் இவ்வாராய்ச்சியாளர். இவ்வாராய்ச்சி பல அரியவரலாற்றுச்செய்திகளைத் தெளியவிளக்குவது; இவ்வுரை பலப்பல அடிகளுக்குச் சீரியபொருளும் பதசாரமும் கருத்தும் விரித்துச்செல்வது.

இவற்றுள் மகாவித்வான் ஐயங்காரவர்கள் தொண்டையர் பல்லவர் திரையர் என்ற பெயர்வரலாறுபற்றி இதுவரை புலவர்கள் கூறிவரும் கூற்றும் பெரும்பாணாற்றுப்படையுட் சில அடிகளுக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் வரைந்தபொருளும் முதலியவற்றை வரைந்து அவற்றோடு மாறுபட்ட தம் கூற்றையும் தாம் கூறும் பொருளையும் ஆதாரத்துடன் விரித்துள்ளார்கள். முன்னையோர் கூற்றோடு மாறுபட்டது; ஆசிரியர் நச்சினார்க்கினியருரையொடு வேறுபட்டது என்றுமட்டும்கொண்டு இவ்வாராய்ச்சியையும் உரையையும் கைவிடாது, ஐயங்காரவர்கள் கூறும் கூற்றும் உரையும் ஆகியவற்றின் இயைபும் பண்டைவரலாறுகளை ஐயங்காரவர்கள் ஆராயும் முறையாலும் அவர்கள்கூறும் புத்துரையாலும் கிடைக்கும் நயமும் ஆகியவைகொண்டு தமிழகம் இதனை ஏற்று இனிது நோக்குக.

சேரவேந்தர் செய்யுட்கோவை:— இதன் முதற்றொகுதி: திருவிதாங்கூர்ப் பல்கலைக்கழகத்தின் முதல் வெளியீடு. இரண்டாந்தொகுதி: அப்பல்கலைக் கழகத்தின் நான்காம்வெளியீடு. இக்கோவையைத் தொடுத்துதவியர்: திரு. ராவ்ஸாஹிப். மு. இராகவையங்காரவர்கள். முதற்றொகுதியின் விலை. ரூபா. 4—8—0. இரண்டாந்தொகுதியின் விலை ரூ. 4—8—0. கிடைக்கும் இடம்: திருவிதாங்கூர்ப் பல்கலைக்கழகம்.

பழந்தமிழரசருள்ளே சேரர் மிகமிகத் தொன்மைவாய்ந்தவர். அவரை அறியாத தமிழர் இல்லை. அவ்வரசரில் தன்னேரிலாத தமிழ்ப்புலவராய்க் கவியரங்கேறினோரும், 'செவ்விய மதுரஞ்சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல்வவ்விய கவி'களால் பாராட்டப் பட்டோரும் பலர். அவர் பாடிய பாடல்களும், அவர் பெற்ற பாடல் களும் அவர் வரலாறுகளும், அவர் நாடு நகர்மலை முதலியவற்றைப் பற்றிய செய்திகளும் தமிழ்நூல்களுள் ஆங்காங்குச் சிதறிக்காணப் படுகின்றன. அவற்றையெல்லாம் காலமுறைப்படி சங்ககாலப் பகுதி இடைக்காலப்பகுதி பிற்காலப்பகுதி என மூன்று தலைப்பின் கீழ்த்தொகுத்துச் சங்ககாலப்பகுதியைத் தன் முதற்றொகுதியா லும் இடைக்கால பிற்காலப்பகுதிகளைத் தன் இரண்டாந்தொகுதி யாலும் வெளியிடுவது இச்சேரவேந்தர்செய்யுட்கோவையென்பது.

இதன் முதற்றொகுதியுள் அகநானூறு முதலிய பதின்மூன்று பழந்தமிழ்நூல்களிலிருந்து 341 பாடல்கள் எடுத்துத் தொடுக்கப் பட்டுள்ளன. அவற்றுள் சேரவேந்தரைப் பிறர் பாடிய பாடல்கள் 135. சேரவேந்தர் இயற்றியபாடல்கள் 76. சேரருடைய நாடு நகர் மலை முதலியவற்றைப்பற்றியபாடல்கள் 47. சேரர்கிளையினரைப் பாடிய பாடல்கள் 50. சேரநாட்டுப்பகுதிகளை ஆண்ட வேற்றரசரைப் பாடிய பாடல்கள் 33. பாடல்பெற்ற சேரவேந்தர் பத்தொன்பதின் மர். பாடிய சேரவரசர் எண்மர்.

இரண்டாந்தொகுதியுள் சேரவரசர் இயற்றியனவாக 251 செய்யுட்களும் சேரவேந்தர்மீது பாடப்பட்டனவாக 60 பாடல்க ளும் அவருடைய நாடு நகர் தலங்களைப்பற்றியெழுந்தனவாக 180 பாசுரங்களும் அவர் வரலாறுநுவலும் 370 பாக்களும் அநுபந்த மாகச் சேர்க்கப்பட்ட சிலகவிகளும் காணப்படுகின்றன.

இவ் விரண்டுதொகுதியும் அவற்றுள் பயின்ற பாடல்களுக்கு விளக்கமான குறிப்புரையும் இன்றியமையாத பொருட்குறிப்பக ராதி முதலிய துணையுறுப்புக்களும் உடையவாக நல்லகாகிதத்தில் செவ்விய எழுத்தில் திருத்தமும் அழகும் அமைய அச்சிடப்பட்டு விளங்குகின்றன.

பல ஆண்டுகள் பல நூல்களைப்படித்து ஆராய்ந்து தெரிந்து கொள்ளவேண்டியவற்றையெல்லாம் சுருங்கிய கால எல்லையுள் எளி தில் அறிந்துகொள்ளும்படி உதவும் இத்தொகைநூல் தமிழாளை வர்க்கும் சிறப்பாகச் சேரநாட்டாருக்கும் பெரிதும் பயன்படுவது.

இவ்வரிய பெரிய செய்யுட்கோவையைத் தொகுத்து வகைப் படுத்துக் குறிப்புரை முதலியவற்றுடன் நல்கிய பெருந்தமிழ்ப் புலவரும் சரித்திர ஆராய்ச்சியில் வல்லுநரும் திருவிதாங்கூர்ப்பல் கலைக்கழகத்துத் தமிழ்ப்பேராசிரியரும் ஆன திருவாளர் ராவ் ஸாஹிப் மு. இராகவையங்காரவர்களுக்கும், நன்கு அச்சிட்டு வெளி யிட்ட திருவிதாங்கூர்ப்பல்கலைக்கழகத்தார்க்கும் தமிழ்மக்கள் என் றும் நன்றி பாராட்டுங் கடப்பாடுடையர்.

திருவாங்கூர்ப்பல்கலைக்கழகம் சில ஆண்டுகளில் பல அரிய பெரிய தமிழ்நூல்களைத் தக்கோரால் ஆராய்ந்து அச்சியற்றி வெளி யிடுவித்துச் சிறந்த தமிழ்ப்பணியாற்றியுள்ளது. அது, மேலும் அப் பணிபுரிந்து நெடிதுவாழத் தமிழ்த்தெய்வம் அருள்புரிக.

---

கோசர்:-இது ஒரு சிற்றாராய்ச்சி; அண்ணாமலைபல்கலைக்கழகத்தமிழ்ப்பதிப் புத்தொடருள் ஒன்று. இதனை எழுதியவர்: பாஷாகவிசேகரர் மகாவித்வான் ரா. இராகவையங்காரவர்கள். கிடைக்குமிடம்: அண்ணாமலைபல்கலைக்கழகம்.

கோசர் என்பார் ஒருவீரர்குழுவினர். இவரைப்பற்றிப் பண்டைத்தண்டமிழ்நூல்களில் ஆங்காங்குப் பல செய்திகள் காணப் படுகின்றன. அவற்றையெல்லாம் தொகுத்துத் தாம் ஆராய்ந்து கண்டவற்றையெல்லாம் மகாவித்வான் ஐயங்காரவர்கள் இப்புத்த கத்து விரித்துள்ளார்கள். இதனுட் காணப்படும் முடிவுகளுட் சில இன்னும் ஆராய்ந்து தெளிவுபெறவேண்டியவாயிருப்பினும் இப்புத்த கம் கோசரைப்பற்றி ஆராயப்புகுவார்க்குப் பெரிதும்பயன்படும்.

கம்பர் கவிதைக் கோவை (முதற்பாகம்):—பதிப்பாசிரியர்.—சுன்னாகம் இராமநாதன்கல்லூரித் தமிழாசிரியர் திரு. அ. சே. சுந்தரராஜன் B.A. அவர்கள். விலை.—ரூபா 4. பதிப்பாசிரியரிடம் பெறலாம்.

புலத்துறைமுற்றிய சான்றோருள் கம்பர் முன் எண்ணத்தக்கவர். அவர் இயற்றிய இராமாவதாரமோ இலக்கியநயமனைத்தும் ஒருங்கமைந்த பாரகாவியமாகும். அஃது இயற்றமிழ் நூலாக மட்டும் இல்லை. தன்கட்பயின்ற பலவேறுவகையான சந்தவிருத்தங்களால் இசைத்தமிழ் நூலாகவும், கதாபாத்திரங்களின் உரையாடலால் நாடகத்தமிழ்நூலாகவும் விளங்குகிறது. அன்றியும் நாடு, நகர், அரசு, அமைச்சு, போர், ஒழுக்கம், உலகநடை, உயர்ந்தோரியல், மாதர் ஆடவர் தருமம் முதலியவற்றைப் பேசுமாற்றால் இலக்கணநூலுமாகும். இதன் கவிச்சுவையில் ஈடுபடாத தமிழ்மக்கள் இல்லை. கன்னற்கட்டியுள் ஒவ்வொருதுண்டும் ஒத்த சுவையுடையவாயினும், அவற்றைச் சுவைப்போருடைய உடற்கூறும் நாவியல்பும் முதலியவற்றால் அவற்றுள் சுவைவேறுபாடு காணப்படல்போல இந்நூலுள் எல்லாப்பாடல்களும் ஒரு நிகரான சுவையுடையவாயினும் அவற்றைப்பயில்வாரும் ஆராய்வாருமாகிய மக்களின் உள்ளம் அறிவு முதலியவற்றுக்கேற்ப அவற்றுள் சுவை வேறுபாடு காணப்படுவதும் இயல்பு. அச்சுவையுணர்வுடையோர் இராமாவதாரநூலுள் தாந்தாம் மிக்கசுவையுடையனவாகக் கண்ட கவிகளைத் தொகுத்து விளக்கவுரைகளுடன் அச்சிட்டு வெளியிடுவாராயினர். இம்முறைதழுவியவற்றுள் நம் செந்தமிழில் வெளிவந்து முற்றிய கம்பராமாயண இன்கவித்திரட்டும் இக் கம்பர்கவிதைக் கோவையும் சிறந்தனவாகும்.

இக்கவிதைக்கோவையின் முதற்பாகத்தைக் கம்பர் இயற்றிய இராமாவதாரநூலுள் பால—அயோத்தியா—ஆரணிய—காண்டங்களில் ஆசிரியர் சுந்தரராஜன் அவர்கள் தாம் இனியவாகக் கண்ட கவிகளைப் பலதலைப்பின்கீழ்ப் பலபாடங்களாகத் தொகுத்து அவற்றை மாணவர்கள் எளிதிற்படித்துச் சுவையுணர்ச்சியான் மகிழும்வண்ணம் ஒவ்வொருபாடத்துக்கும் முன்னுரையும் ஒவ்வொருபாடலுக்கும் குறிப்புரையும் வரைந்து அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள்.

கம்பர்கவிப்பகுதிகளையிடைமடுத்தெழுதப்பட்ட முன்னுரையுள் பாலகாண்டப் பாடங்களுக்குரியவை தனிச்சிறப்புடையன. மூலத்துள் ஆசிரியர்கொண்ட சிலபாடங்களும் குறிப்புரையுள் ஆங்காங்கு ஒருசிலபகுதிகளும் ஆராய்ந்து திருத்தத்தக்கன. எனினும் இது மாணாக்கருக்கும் பிறர்க்கும் பெரிதும் பயன்விளக்குமென்பதில் ஐயமில்லை. இதனைத் தொகுத்து உரைகளுடன் அச்சிட்டு வெளியிட்ட ஆசிரியர் பாராட்டற்குரியர். அவர் இரண்டாம்பாகத்தையும் சீரிய முறையில் வெளியிடற்கு இறைவன் அருள்புரிக. இக்கோவை தமிழ்மக்களால் பெரிதும் ஆதரிக்கப்படும் என்று நம்புகிறோம்.

---

தித்தன்:—அண்ணாமலைபல்கலைக்கழகவெளியீடு. எழுதியவர்: பாஷாகவிசேகரர் மஹாவித்வான் ரா. இராகவையங்காரவர்கள். கிடைக்கும் இடம்: அண்ணாமலைபல்கலைக்கழகம்.

தித்தன் என்பான் ஒருவீரன். இவன்செய்தி புறநானூறு முதலிய பழந்தமிழ்நூல்களிற் காணப்படுகிறது. “அகநானூற்றுள்ளும் (6, 122, 226) புறநானூற்றுள்ளும் (395) முறையே ‘தித்தன் உறந்தை’, ‘தித்தன் வெளியன் உறந்தை’, ‘தித்தன் செல்லாநல்லிசையுறந்தை’ எனப் பயின்ற வழக்குக்கொண்டு இவனைச் சோழர்குடிப் பிறந்தானென்பர் ஒருசாரார். அது பொருந்தாது; இவன் வேளிர் குடியினனே” என்று சங்கநூற்சான்றுகொண்டுகாட்டுவது இவ்வுரைநடையான் அமைந்த சிறுநூல். இந்நூலையெழுதியுதவியவர் தமிழுலகறிந்த புலமைசான்ற பெரியார்; சரித ஆராய்ச்சியிலும் சொற்பொழிவாற்றலிலும் புலவர்போற்றப் புதுநூலாக்கியளித்தலிலும் பிறதுறைகளிலும் முன்னின்றவர். இவர் தித்தனை வேளிர் குடியினனே என்று பழந்தமிழ்நூலாதாரவுகொண்டுகாட்டும் இக்கட்டுரைநூலுள் வேறுபலசெய்திகளும் அறியக்கிடக்கின்றன. இவ்வாராய்ச்சி மகாவித்வான் ரா. இராகவையங்காரவர்கள் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தமிழாராய்ச்சியாளராய் இருந்த காலத்து எழுதி முடிக்கப்பட்டது. ஐயங்காரவர்கள் எழுதிய பிற கட்டுரைகளையும் தமிழாராய்ச்சியாளர்க்குப் பயன்படும்படி அண்ணாமலைபல்கலைக்கழகம் வெளியிட்டுதவுமென்று நம்புகிறோம்.

---

சங்கரவிலாசம்:—திருவேங்கடேசுவரர் கீழ்த்திசைக்கலைக்கழகத்தின் இருபதாம் வெளியீடு. இயற்றியவர். சிதம்பரநாதகவி. பதிப்பாசிரியர்: வித்வான் திரு. T. P. பழநியப்பபிள்ளை (B.O.L) அவர்கள். விலை:—ரூபா. 3—4—0. கிடைக்குமிடம்:— திருவேங்கடேசுவரர் கீழ்த்திசைக்கலைக்கழகம், திருப்பதி, சித்தூர்ஜில்லா.

சங்கரவிலாசம் என்பது சிவபெருமான் திருவிளையாடல் என்று பொருள்படும். இங்கே விலாசம் (திருவிளையாடல்) என்பது அதனையுணர்த்தும் நூலைச் சுட்டிநின்றது. இந்நூல், கடவுள் வாழ்த்துமுதல் கோதாவிரிமகிமையுரைத்த அத்தியாயம் இறுதியாக உள்ள இருபத்தைந்து தலைப்பில் 1435 விருத்தப்பாடல்களை உடையது; தென்பாண்டிநாட்டுள் சீராசை என்று வழங்கும் சங்கரநயினார்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனருளால் இயற்றப்பட்டது; புராணநெறிதழுவியது; சிவபுராணங்களிற்கண்ட சிறந்த கதைகளின் தொகுப்பாய் அமைந்தது; சிறப்புவாய்பாட்டால் ஏதேனும் ஒரு தல தீர்த்த மூர்த்தி மகிமைகூறுது, பொதுவாய்பாட்டாற் சிவபெருமான்பெருமைகளையும், சிவநாமம் பஞ்சாக்ஷரம் விபூதி உருத்திராக்கம் என்பவற்றின் மாண்பினையும் சிவபிரான் எழுந்தருளியுள்ள சிதம்பரம் ஆரூர் காளத்தி காஞ்சி ஸ்ரீசைலம் உருத்திரகோடி என்னும் தலங்களின் மான்மியத்தினையும், கோதாவிரிதீர்த்தச்சிறப்பினையும் விரிப்பது; இனிய செய்யுணடையுடையது. இதனையியற்றிய, திருநெல்வேலிஜில்லாவிலுள்ள விஜயநாராயணம் என்ற ஊரில் வாழ்ந்த சிதம்பரநாதபூபதி என்பவர் கி. பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவர். இவையெல்லாம் இந்நூற் கடவுள்வாழ்த்துள்ளும் பதிகத்துள்ளும் பயின்ற பாடல்களால் அறியப்படுவன.

[இந்நூல், யாழ்ப்பாணத்துக் கொக்குவில் இரகுநாதையர் சோதிடபரிபாலனமடத்துத் தலைவர் திரு. சி. இரத்தினசபாபதி ஐயரவர்களால் சகம் 1860 ஈசுரவருஷ கார்த்திகைமீ (கி. பி. 1937-ஆம் ஆண்டு) முதன்முறை அச்சிட்டு வெளியிடப்பட்டது. அப்பதிப்புப்பற்றி 1938-ஆம் ஆண்டு நவம்பர்மீ 27உ வெளிவந்த சென்னை ஆங்கிலதினசரியாகிய ஹிந்துவில் ஆங்கிலத்தில் விரிந்த மதிப்புரையொன்று திரு. S. வையாபுரிப்பிள்ளையவர்களால் வரையப்பட்டுளது.]

"தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழ்அரவும் பொன்னாணும் தோன்றுமால்—சூழுந்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்
கிரண்டுருவும் ஒன்றா யிசைந்து"

என்ற ஆன்றோர் அருளிச்செயற்கியைபத் திருமால்பத்திமுதலிய பெரும்பேறுகளையுதவும் திருவேங்கடத்தலபுராணத்தை முன்னே வெளியிட்டு அடுத்துச் சிவபத்திமுதலிய அரும்பெறற்பயன்விளைக் கும் இச்சங்கரவிலாசநூலினையும் செவ்விய முறையில் இப்பொழுது பதித்துத்தந்த ஆசிரியர் திரு. T. P. பழநியப்பபிள்ளையவர்களும், திருவேங்கடேசுவரர் கீழ்த்திசைக்கலைக்கழகத்தாரும் போற்றற் குரியர்.

---

பிற்காலச்சோழர்சரித்திரம்:—இது அண்ணாமலைபல்கலைக்கழகத் துத் தமிழ்ப்பதிப்புவரிசையுள் ஒன்று. இதனை எழுதியவர்: அப் பல்கலைக்கழகத்துத் தமிழ்விரிவுரையாளரான திரு. T. V. சதாசிவ பண்டாரத்தாரவர்கள். இது கிடைக்கும் இடம்: அண்ணாமலைபல் கலைக்கழகம்.

சோழர் படைப்புக்காலந்தொட்டுவந்த தமிழகத்து மும்மன்ன ருள் ஒருபிரிவினர். இவர் பெருமை அளத்தற்கரிது. அதனைச் சங்கத்தொகைநூல்கள் சிலப்பதிகாரம் முதலியவற்றுள் காணலாம். எனினும், இவர் சரிதம் வரன்முறையாகக் காண்டல் அரிது. அத னைக் காலமுறைப்படி தொகுத்தெழுத முற்பட்டார் பலர். அவரால் எழுதப்பட்ட நூல்களும் பல. அவற்றுள் இச்செந்தமிழ்ப்பிரசுர மாக T. A. கோபிநாதராயரவர்களால் வெளியிடப்பட்ட சோழவமிச சரித்திரம் என்பதும் ஒன்று. அதுவேயன்றி நம் செந்தமிழில் வெளி வந்த ஆராய்ச்சிக்கட்டுரைகளும் பல. இவற்றையும் அரசாங்கத் தார் வெளியிட்டுவந்த கல்வெட்டுக்களையும் அறிக்கைகளையும் தாம் ஆராய்ந்துகண்ட பிறவற்றையும் துணைக்கொண்டு அண்ணாமலைபல் கலைக்கழகத்துத்தமிழ்விரிவுரையாளரும் சிறந்த ஆராய்ச்சியாளரு மான திரு. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள் பிற்காலச்சோழர் சரித்திரம் என்னும் இவ்வுரைநடைநூலை எழுதியுதவியுள்ளார்கள்.

இந்நூலுள் கி. பி. 846க்கும் கி. பி. 1279க்கும் இடைப்பட்ட காலத்தே வாழ்ந்த (சோழன் விஜயாலயன் முதல் அதிராசேந்திரன் இறுதியாகவுள்ள) பதின்மூன்று சோழர்களுடைய சரித்திரம் தெளிவாகத் தக்க ஆதாரங்களுடன் எழுதப்பட்டுள்ளது. மேலும் இச்சரிதம் படிப்பார்க்குப் பயன்படும்படி சோழர் மெய்க்கீர்த்திகளும் பாடல்களும் மரபுவிளக்கமும் பொருட்குறிப்பகராதியும் ஆசிரியரால் நன்கு எழுதிச்சேர்க்கப்பட்டுள்ளன,

தமிழ்நாடு பரந்துபட்டது; அதனை ஆண்ட அரசரும் பலர். அவர் சரிதமும் நாட்டுச்சரித்திரமும் முன்னோர்களால் முறையாக எழுதப்படாதநிலையில் காலங்கடந்த வரலாறுகளை இருட்டறையில் பொருள்களைத் தடவியறிவார்போலத் தேடித்தேடி ஆராய்ந்து ஆராய்ந்து ஒருதொடைப்படக்கோப்பதென்பது எளிதிற் செய்யத்தக்கதன்று. அவ்வாறு ஆய்ந்துதொடுப்பனவற்றுள் சில தவறுபடவுங்கூடும். ஆயினும் ஆசிரியர் பண்டாரத்தாரவர்கள் தக்க ஏதுக்களாலும் மேற்கோள்களாலும் படிப்போர் மேலும் மேலும் விரும்பிப்படிக்கும்வண்ணம் இச்சரித்திரத்தை முறைப்பட வகுத்து விரித்து எழுதிச்சென்றிருப்பது பாராட்டத்தக்கது.

பன்மொழிப்புலவர் உயர்திரு. தெ. பொ. மீநாட்சிசுந்தரனார் M.A., B,L. M.O.L. Dep. EC., M.R.A.S. அவர்கள் எழுதியுதவிய ஆங்கில முன்னுரை இதற்கு அணிகலமாகத் திகழ்கிறது. அதனுட் பொருள்களைத் தமிழொன்றேயறிந்தவர்களும் தெரிந்துகொள்ளும்படி அதற்குச் செவ்விய தமிழுரைநடையில் ஒரு மொழிபெயர்ப்பு வரைந்து அச்சிட்டுச்சேர்ப்பது இன்றியமையாததாகும்.

இதனை அரசாங்கத்தார் கல்லூரிமாணவர்க்கும் வித்வான் பரீக்ஷைக்குப் பயில்வோர்க்கும் பாடபுத்தகமாக்கி ஆசிரியர் மேலும் தமிழ்நாட்டுவரலாறுகளை நன்கெழுதி வெளியிட ஊக்கமூட்டுவார்களாக.

உ

கடவுள் துணை

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

நாற்பத்தாறுந்தொகுதி.

**Volume 46.**

விரோதி—விக்ருதி ஸு

1949—1950

பத்திராசிரியர்—திரு. கி. இராமாநுஜையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை,

மதுரை.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்

## சசு-ஆம் தொகுதியின் உள்ளுறை.


| கட்டுரையின் பெயர் | எழுதியவர் பெயர் | கட்டுரை தொடங்கும் பக்கம். |
| --- | --- | --- |
| அதிகமான் நெடுமான்—அஞ்சி வரலாற்றுட் சில ஐயங்கள்:— | திரு. சு. குமாரசுவாமி ஆசாரியார் B.O.L. | ௯௭ |
| அம்பிகைநவமணிமாலை:— | திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் | ௧௮௩ |
| உலகியலும் இலக்கியமும்:— | திரு. சி. கணேசையரவர்கள் | ௧௯ |
| உவவனம்:— | திரு. N. S. தாத்தாசாரியரவர்கள் | ௫௭ |
| ஐயவினாத்தொடர்:— | ஒருமாணவன் ... ... | ௧௪௫, ௧௮௧ |
| ஒரு கம்பசூத்திர வுரையாராய்ச்சி:— | திரு. இலக்குவன் | ௧௧௩ |
| கவிச்சக்கரவர்த்தி கம்பனே:— | திரு. சி. கணேசையரவர்கள் | ௮௧ |
| காப்பிய-உவமை:— | திரு. S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A.B.L. | ௧ |
| குடியரசுத்திருநாட்கொண்டாட்டம்:— | பத்திராசிரியர் | ௮௪ |
| குடியரசுத்திருநாள் வாழ்த்து:— | திரு. T. K. இராமாநுஜையங்கார் பத்திராசிரியர் | ௬௫ |
| தக்கயாகப்பரணி:— | திரு. தி. சேஷாத்திரிஐயங்காரவர்கள். | ௧௯௩ |
| தமிழ்வளர்ச்சி:— | திரு. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள் | ௨௦௭ |
| தமிழெழுத்துச் சீர்திருத்தம்:— | திரு. D. மனுவேல் அவர்கள் B.A., L.T. | ௧௮௫ |
| திராவிடமொழி களின் உறவு:— | திரு. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A. B.L. | ௫௧ |

| | | |
|---|---|---|
| திருக்குருகூர்த் திருப்பணிமாலை:— | திரு. L. ஆதிநாதபிள்ளையவர்கள் | உரு, எகூ, க0ரு, கஉக, கஎஎ |
| திருக்குறட்காலத்து அரசியன்முறை:— | திரு. S. சுந்தரராஜையங்காரவர்கள், M.A., M. LITT. | கருங |
| திருமுருகாற்றுப்படை:— | திரு. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள் | உ0க |
| திருவாசக நீத்தல் விண்ணப்பம்:— | திரு. மஹாமஹோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள் | கசுக |
| தெய்வப்புலவரின் நாவுணர்ச்சி:— | திரு. சி. கணேசையரவர்கள் | எங |
| நாடி பரீக்ஷை:— | ஒரு மருத்துவர் | கசு0 |
| நாலடியார் இருவருரைத்திருத்தம்:— | திரு. சத்தியவாகீசுவரையரவர்கள், | கஙரு, கசுகூ, உ0கூ |
| நீராமகளிரும் யாழ்நூலாசிரியரும்:— | திரு. பண்டித. வி. சீ. கந்தையா அவர்கள். | சூக |
| பராசத்திதோத்திரம்:— | திரு. த. ச. மீநாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் | கசஅ |
| பழையகொள்கை அழிந்தது:— | திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B.A., B.L. | ஙஎ |
| பெண்களுக்குப் பெருந்தகைமை கற்பே:— | திரு. சி. கணேசையரவர்கள் | கஉகூ |
| மதிப்புரை:— | பத்திராசிரியர் | அரு, கூசூ, கசூகூ, கஅகூ, உகஎ |
| வர்ணனைமரபுகள்:— | திரு. S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L. | சுஎ |


## அநுபந்தம்.

### நூல்.

[முற்றுப்பெற்றது]


| | | |
|---|---|---|
| திருச்சிறுபுலியூர்-உலா குறிப்புரையுடன்:— | T. K. இராமாநுஜையங்கார் பத்திராசிரியர் | (பகுதி க, உ, சூ, சு, க0) |

# செந்தமிழ் ௨௯-ஆம் தொகுதிக்குப் பொருளுரைவழங்கியோர்பெயரும் பொருளுரைகளின்பெயரும் பக்கமும்


திரு. பே. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B.A.,B.L., மயிலாப்பூர்.

பழையகொள்கை அழிந்தது ... ... ௩௭

திரு. L. ஆதிநாதபிள்ளையவர்கள், ஆழ்வார்திருநகரி.

திருக்குருகூர்த் திருப்பணிமாலை ௨௫, ௭௯, ௧௦௫, ௧௨௧, ௧௭௭

T. K. இராமாநுஜையங்கார், பத்திராசிரியர்.

ஒரு கம்பசூத்திரவுரையாராய்ச்சி ... ...௧௧௩

குடியரசுத்திருநாட்கொண்டாட்டம் ... ௮௪

குடியரசுத்திருநாள்வாழ்த்து ... ... ௬௫

மதிப்புரை ௮௫, ௯௪, ௧௪௯, ௧௮௯, ௨௧௭

திருச்சிறுபுலியூர்-உலா குறிப்புரையுடன்:— பகுதி ௨, ௩, ௪, ௬, ௧௦

ஒரு மருத்துவர்.

நாடிபரீக்ஷை ... ... ௧௬௦

ஒரு மாணவன்

ஐயவினைத்தொடர் ... ௧௪௫, ௧௮௧

திரு. சி. கணேசையரவர்கள், யாழ்ப்பாணம்.

உலகியலும் இலக்கியமும் ... ... ௧௯

கவிச்சக்கரவர்த்தி கம்பனே ... ... ௮௯

தெய்வப்புலவரின் நாவுணர்ச்சி ... ... ௭௩

பெண்களுக்குப்பெருந்தகைமை கற்பே ௧௨௯

திரு. மஹாமஹோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள், மகிபாலன்பட்டி.

திருவாசக நீத்தல்விண்ணப்பம் ... ...௧௬௧

திரு. வி. சீ. கந்தையாஅவர்கள், யாழ்ப்பாணம்.
நீரரமகளிரும் யாழ்நூலாசிரியரும். ... சக

திரு. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள், B.A., B.L.,
அட்வகேட், மதுரை.
திராவிடமொழிகளின் உறவு ... ... ருக

திரு. சு. குமாரசுவாமிஆசாரியாரவர்கள், B.O.L. மயிலம்.
அதிகமான் நெடுமானஞ்சிவரலாற்றுட்
சில ஐயங்கள். ... ... ... கூஎ

திரு. சத்தியவாகீசுவரையரவர்கள், திருவகந்தபுரம்.
நாலடியார்—இருவருரைத்திருத்தம் கஙரு, கசுகூ, உ0கூ

திரு. S. சுந்தரராஜையங்காரவர்கள் M.A; M. LITT, மதுரை.
திருக்குறட்காலத்து அரசியன்முறை. ...கருங

திரு. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், திருவையாறு.
திருமுருகாற்றுப்படை ... உ0க

திரு. தி. சேஷாத்திரிஐயங்காரவர்கள், மதுரை.
தக்கயாகப்பரணி ... கசுங

திரு N. S. தாத்தாசாரியரவர்கள், தஞ்சை.
உவவனம் ... ... ... ருஎ

திரு. D. மனுவேல் அவர்கள் B.A., L.T. மதுரை.
தமிழெழுத்துச் சீர்திருத்தம் ... கஅரு

திரு. த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள், கும்பகோணம்.
அம்பிகை நவமணிமாலை ... கஅங
பரர்சத்திதோத்திரம் ... ...ககஅ

திரு. S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L. சென்னை.
காப்பியஉவமை ... ... ... க
வர்ணனைமரபுகள் ... ... ... சுஎ

திரு. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள், மயிலாப்பூர்.
தமிழ்வளர்ச்சி ... ... உ0எ

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

## I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... ... | 1 | 8 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றும்பாகம்... ... | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல்(நச். உரை ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ... ... | 1 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| 17. | அகநானூறு மூலமும் உரையும் (முதல் 36 செய்யுள்) | 0 | 12 | 0 |

---

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 2 | கனாநூல் (5) இனியவைநாற்பது (உரை) ... | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ... | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... .. ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் ... | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பகமூலமும் உரையும் ... | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா ... | 0 | 8 | 0 |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... ... | 0 | 8 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100)... | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு ... ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | குடிக்கொண்டித்தாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 67. | அமிர்தாஞ்ஜலி ... ... ... | 0 | 2 | 0 |
| 69. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ... | 0 | 8 | 0 |
| 70. | திருச்சிறுபுலியூருலா ... | 0 | 12 | 0 |

**குறிப்பு:**-கைவசம் இல்லாத சங்கப்பிரசுரங்களும் செந்தமிழ்ப்பிரசுரங்களும் இதில் குறிக்கப்படவில்லை. மறுபடி அச்சிட்டு வெளியானதும் இப்பட்டியலில் சேர்க்கப்படும்.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" ப்பத்திரிகைக்கு வருஷசந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷசந்தா ரூ 4—8—0. இதுவரை 46 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4–0–0 வீதம் விற்கப்பெறும். வீ. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.